

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.10.2023) முகாம் அலுவலகத்தில், பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி சந்தித்து, தனது மகள் டாக்டர் தாரணி - டாக்டர் பரத் கௌசிக் ஆகியோரது திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் இரு வீட்டாரின் குடும்பத்தினர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 12.10.2023 அன்று சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் கே.கலைச்செல்வன் அவர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் ரூ.7.20 இலட்சம் மதிப்பில் செயற்கை காலுக்கான உபகரணங்களை வழங்கினார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னை பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும்

# மாணவர்கள் - ஆசிரியர்கள் உள்பட 1506 பேருக்கு உதவித்தொகை!

## அமைச்சர் கே.என். நேரு வழங்கினார்!

சென்னை, அக்.14-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் சென்னை பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சிறப்பு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள், உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள் என மொத்தம் 1506 மாணவ, மாணவியர், ஆசிரியர்களுக்கு ரூ.87 இலட்சத்து 44 ஆயிரத்து 500 கல்வி உதவித் தொகை மற்றும் ஊக்கத்தொகையினை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, பசுமைப் பரப்பளவினை அதிகரிக்கும் வகையில் மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார். பின்னர், சென்னை பள்ளிகளின் செயல்பாடு மற்றும் வளர்ச்சி குறித்த வீடியோ குறும்படம் ஒளி பரப்பப்பட்டது.

விழாவில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்காக சென்னை பள்ளிகள் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சென்னை பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்கள், அரசு பொதுத் தேர்வில் சிறப்பு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள், உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் ஆகியோருக்கு இன்று உதவித் தொகை மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை பள்ளிகளில் மாணவர்கள் எளிதில் கல்வி பயிலும் வகையில் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை பள்ளியில் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் மிகவும் திறமையான வர்களாகவும் உள்ளனர். மாணவ, மாணவியர் தற்பொழுது உங்களுக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பினை தவறவிடாமல் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் சிறக்க வேண்டும். இதற்கு தமிழ்நாடு அரசு உங்களுக்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தந்து உதவிபுரியும். தனியார் பள்ளிகளுக்கு இணையாக அனைத்து வசதிகளும், குறிப்பாக சீர்மிகு வளவகுப்பறைகள் தற்பொழுது ஏற்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

முதலமைச்சர் சென்னை மேயராக இருந்தபோது சென்னை பள்ளிகளில் ஒரு லட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர் என்று கலைஞர் அவர்களிடம் சொன்னார். மேலும், அவர் மேயராக இருந்த போது மாநகராட்சி பள்ளிகளில் ஏற்படுத்தி தந்த அனைத்து வசதிகள், ஆசிரியர்கள், பள்ளிக் கட்டமைப்பு ஆகியவற்றின் காரணமாக தற்பொழுது ஒரு லட்சத்து 32 ஆயிரம் மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சியில் கல்விக்கென்று தனிக்கவனம் செலுத்தி அனைத்து நடவடிக்கைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் சந்திப்பில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது

மார்ச் 2023 அரசு பொதுத் தேர்வில் சென்னை பள்ளிகளில் சிறப்பு மதிப்பெண் பெற்ற 10ஆம் வகுப்பில் 324 மாணவர்களுக்கு ரூ.4,84,500/-, 12ஆம் வகுப்பில் 383 மாணவர்களுக்கு ரூ.11,78,000/- பாடப்பிரிவில் சிறப்பு மதிப்பெண் பெற வைத்த ஆசிரியர்களில் 10ஆம் வகுப்பில் 204 ஆசிரியர்களுக்கு ரூ.6,07,500/-, 12ஆம் வகுப்பில் 277 ஆசிரியர்களுக்கு ரூ.7,24,500/-, தேர்ச்சி சதவீதத்தை அதிகரித்து கொடுத்த 13 தலைமையாசிரியர்களுக்கு ரூ.70,000/- என மொத்தம் 707 மாணவர்கள் மற்றும் 494 ஆசிரியர்களுக்கு ரூ.30,64,500/- ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயின்று 2022-2023ஆம் கல்வியாண்டில் உயர்கல்வி பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு முதலாம் ஆண்டு மருத்துவம் பயிலும் 1 மாணவருக்கு ரூ.45,000/-, பொறியியல் பயிலும் 87 மாணவர்களுக்கு ரூ.39,15,000/-, கலை மற்றும் அறிவியல் பயிலும் 150 மாணவர்களுக்கு ரூ.10,50,000/-, செவிலியர் பயிற்சி பயிலும் 38 மாணவர்களுக்கு ரூ.3,80,000/-, பட்டயப்படிப்பு பயிலும் 24 மாணவர்களுக்கு ரூ.2,40,000/-, சட்டப்படிப்பு பயிலும் 5 மாணவர்களுக்கு ரூ.50,000/- என மொத்தம் 305 மாணவர்களுக்கு ரூ.56,80,000/- முதலாம் ஆண்டு கல்வி உதவித் தொகையும் இன்று வழங்கப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக கூட்டங்கள் நடத்தப்பட்டு, சேவைத்துறைகளின் சார்பில் 2 மாத காலங்களுக்கு சாலை வெட்டுக்கள் மேற்கொள்ளக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் புதியதாக சாலை வெட்டுப் பணிகள் மேற்கொள்ளாமல், ஏற்கனவே சாலை வெட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை விரைந்து முடித்து, சாலைகளை சீரமைக்கும் பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மின்வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் பூந்தமல்லி பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 3,877 சாலைப் பணிகள் முடிவுற்றுள்ளன. தினந்தோறும் சராசரியாக 70 சாலைகளை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பருவமழைக்கு முன்னதாக இன்னும் ஒரு வாரக் காலத்திற்குள் ஒப்பந்தம் போடப்பட்ட அனைத்து சாலைப் பணிகளும் முழுவதுமாக முடிக்கப்பட்டு விடும். மேலும், மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளையும் விரைந்து முடித்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் த.விசுவநாதன் (கல்வி), துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, நிலைக்குழுத் தலைவர்கள் நே.சிற்றரசு (பணிகள்), தா.இளையஅருணா (நகரமைப்பு), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி) மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டம்

# ஆவடி மாநகர தி.மு.க. சார்பில் பி.எல்.ஏ.2. - பி.எல்.சி. ஆய்வுக்கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ அறிவிப்பு !



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஆவடி மாநகரத்துக்கு உட்பட்ட ஆவடி வடக்கு, மேற்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் (மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.) எனது தலைமையில் ஆவடி சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் ஆர். டி.இ.ஆதிசேசன் முன்னிலையில் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மாவட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ. வினோத் மேற்பார்வையாளர்கள் BLA2. BLC ஆய்வு செய்யும் நிகழ்ச்சி கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

**நாள் : 15.10.2023 – நேரம் : காலை 8 மணி**

| இடம் | பகுதி கழக செயலாளர் | வட்டக் கழக செயலாளர் |
|---|---|---|
| சேவியர் மஹால் அண்ணாநகர் பட்டாபிராம் | ஆவடி வடக்கு பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத் | 14 ஆவது வார்டு பன்னீர்செல்வம், 21வது வார்டு ரவிக்குமார், 22 வது வார்டு ரமேஷ் |

**நாள் : 15.10.2023 – நேரம் : காலை 9 மணி**

| இடம் | பகுதி கழக செயலாளர் | வட்டக் கழக செயலாளர் |
|---|---|---|
| விநாயகர் கோவில் மண்டபம் அண்ணா தெரு கோவில் பதாகை | ஆவடி மேற்கு பகுதி செயலாளர் பொன் விஜயன் | 5 வது வார்டு கிருஷ்ணமூர்த்தி, 11வது வார்டு சுரேஷ், 12வது வார்டு ரவி சந்திரன் |

**நாள் : 15.10.2023 – நேரம் : காலை 10 மணி**

| இடம் | பகுதி கழக செயலாளர் | வட்டக் கழக செயலாளர் |
|---|---|---|
| சேர்க்காடு திருமண மண்டபம் | ஆவடி வடக்கு பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத் | 20 வது வார்டு தமிழ்வாணன், 37 வது வார்டு பார்த்திபன், 45 வது வார்டு ஆனந்த், 24 வது வார்டு பி.பி.பெருமாள் |

**நாள் : 15.10.2023 – நேரம் : மாலை 4 மணி**

| இடம் | பகுதி கழக செயலாளர் | வட்டக் கழக செயலாளர் |
|---|---|---|
| மேற்கு பகுதி அலுவலகம் பொன் விஜயன் | ஆவடி மேற்கு செயலாளர் பட்டாபிராம் | 11 வது வார்டு பார்த்தசாரதி, 2 வது வார்டு ஜசய்யா, 3 வது வார்டு இளங்கோ, 4 வது வார்டு முனிசாமி |

**நாள் : 15.10.2023 – நேரம் : மாலை 5.30 மணி**

| இடம் | பகுதி கழக செயலாளர் | வட்டக் கழக செயலாளர் |
|---|---|---|
| சுபம் மஹால் தமிழ்நாடு குடியிருப்பு ஆவடி | ஆவடி தெற்கு பகுதி செயலாளர் ஜி.ராஜேந்திரன் | 34 வது வார்டு பாலா, 35 வது வார்டு பா.யுவராஜ், 40 வது வார்டு எஸ்.விஜயன், 41 வது வார்டு வி.மனோகர், 42 வது வார்டு சத்தியா ரவி, 31 வது வார்டு சக்திவேல், 33 வது வார்டு விஜயகுமார் மற்றும் ஆவடி.ஜி.ராஜேந்திரன் |

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் BLA2. BLC மேற்பார்வையாளர்கள் வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

### வரிப் பகிர்வில் –

# தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, அக். 14-

வரி பகிர்வில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்று தீக்கதிர் நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

அது வருமாறு:-

வரிப் பகிர்வில் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு எந்தெந்த வகையில் வஞ்சிக்கிறது என்று மாநில நிதியமைச்சர் தங்கம் தென்னரசு வெளி யிட்டுள்ள தகவல்கள் அதிர்ச்சியளிப்ப தாக உள்ளன.




தமிழக சட்டப் பேரவையில் துணை மதிப்பீடு களை மாநில நிதியமைச்சர் தாக்கல் செய்தார். அதன் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில ளித்த அவர் ஒன்றிய அரசுக்கு வரி வருவாயாக தமிழ்நாடு ஒரு ரூபாய் கொடுக்கிறது என்றால், அதற்கு ஈடாக’ ஒன்றிய அரசிடமிருந்து திரும்ப 29 பைசா மட்டுமே கிடைக்கிறது. ஆனால் பாஜக ஆளக்கூடிய உ.பி.மாநிலம் ஒரு ரூபாய் வரி செலுத்து மானால் அதற்கு ஈடாக இரண்டு ரூபாய் 73 பைசாவை திரும்பப் பெற்றுக் கொள்கிறது. இதி லிருந்தே ஒன்றிய அரசின் வரி பங்கீட்டு முறை எந்தளவிற்கு சமச்சீரற்றதாக, அநீதியானதாக பி உள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஜிஎஸ்டி வரியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலங்களுக்கு ஏற்படும் இழப்பீட்டை குறிப்பிட்ட காலம் வரை ஒன்றிய அரசு ஈடு • • செய்யும் என்று கூறப்பட்டது. 2022ஆம் ஆண்டு ஜீன் 30ஆம் தேதியுடன் ஜிஎஸ்டி வரிக்கான இழப்பீட்டு முறை நிறுத்தப்பட்டு விட்டது. இதை மேலும் சில ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஒன்றிய அரசு ஏற்க மறுத்து விட்டது. இதனால் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் கடும் பாதிப்பை சந்திக்க வேண்டியுள்ளது.

இழப்பீட்டுத் தொகையையும் உரிய காலத்தில் முழுமையாக ஒன்றிய அரசு வழங்க “மறுத்தது. இப்போது இழப்பீடு வழங்குவதும் நிறுத்தப்பட்டு விட்டது. கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் வரை ஜிஎஸ்டி வரி இழப்பீடாக தமிழ்நாட்டிற்கு ரூ.9,603 கோடி கிடைத்திருக்க வேண்டும். ஆனால் ரூ.3,533 கோடி மட்டுமே ஒன்றிய அரசி னால் தரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு மட்டும் ஜிஎஸ்டி வரியால் 20 ஆயிரம் கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள் ளது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜி.எஸ்.டி. வரி இழப்பை சுட்டிக்காட்டினால் மாநில அரசுகள் கடன் பெற்றுக் கொள்ளுமாறு ஒன்றிய அரசு கை காட்டுகிறது. அவ்வாறு கடன் பெறுவதற்கும் மின்துறை உள்ளிட்ட அரசுத் துறைகளை தனியாருக்கு தர வேண்டும் என ஒன்றிய அரசு நிபந்தனை விதிக்கிறது.

வரிப் பகிர்வில் மட்டுமல்ல, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணியை துவங்க மறுப்பது, தமிழ்நாட்டின் ரயில்வே திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்க மறுப்பது, கீழடி போன்ற இடங்களில் ஒன்றிய அகழ்வாய்வு துறை மூலம் அகழ்வாய்வு நடத்த மறுப்பது, இந்தித் திணிப்பு என பல்வேறு வகை களில் தமிழகத்தை வஞ்சிக்கிறது ஒன்றிய பாஜக கூட்டணி அரசு. இந்த அநீதிக்கு எதிரா கக் குரல் கொடுக்க வேண்டியது தமிழக மக்கள் அனைவரது கடமையு மாகும்.

இவ்வாறு தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



சென்னை ஓமந்தூரார் தோட்டத்தில் அமைந்துள்ள, தமிழ்நாடு அரசு பண்ணோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்ட அரங்கில் நேற்று (13.10.2023) உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுத்துறை பொது விநியோகத்திட்டம், குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத்துறை அலுவலர்களின் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசுச் செயலாளர் முனைவர் டி. ஜகந்நாதன், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் ஹர் சஹாய் மீனா, குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத்துறை காவல்துறை தலைவர் க.ஜோஷி நிர்மல்குமார், தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் எஸ்.பழனிச்சாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர். அண்ணாதுரை, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### சேலம் கிழக்கு மாவட்டம்

# கெங்கவல்லி ஒன்றியம், தம்மம்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் கிழக்கு மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், தம்மம்பட்டி பேரூர்க் செயலாளர் வி.பி.ராஜா அவர்கள், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **என்.சண்முகம்,** (தம்மம்பட்டி & அஞ்சல், சேலம் மாவட்டம்.) அவர்கள், தம்மம்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.10.2023

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

## ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!






திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், சோழவரம் வடக்கு ஒன்றியம், பஞ்செட்டி ஊராட்சி பஞ்செட்டி கிளை இளைஞர் அணி தி.மு.க. சார்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் கைப்பந்து போட்டி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ. கோவிந்தராசன் அறிவுறுத்தலின் படி சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் வழுதிகை நா. செல்வசேகரன் வெற்றி பெற்ற அணி வீரர்களுக்கு 50000 மதிப்பிலான ரொக்க பரிசு மற்றும் கோப்பைகளை வழங்கி சிறப்பித்தார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கிளை கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் சுற்று வட்டார கிராமங்களில் இருந்து ஏராளமான விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு உற்சாகமாக விளையாடினர்.